


மல்லசமுத்திரம் மஹேந்திரா கல்வி நிறுவனத்தில் சர்வதேச மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது.

# மல்லசமுத்திரம் மஹேந்திரா இன்ஜி. கல்லூரியில் மகளிர் தின விழா

திருச்செங்கோடு,மார்ச்.9-

மஹேந்திரா கல்வி நிறுவனம் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா நடைபெற்றது. கல்லூரி வளாகத்திலுள்ள மகாத்மாகாந்தி கலையரங்கில்நடைபெற்ற இந்த விழாவிற்கு கல்லூரியின்நிறுவனர்பாரத்குமார் தலைமை வகித்தார்.

விழாவில்சிறப்பு விருந்தினராக பர்வின் சுல்தானா கலந்துகொண்டுபேசினார். கற்றலோடு நில்லாமல், சமூகமறுமலர்ச்சிஅடைய தன்னை தயார்படுத்திகொள்ளவேண்டும், அறிவு மற்றும்உணர்வுசார்நன்றியுடன்உயர்நிலையைஅடைய வேண்டும் என்றும் பெண் சமுதாயம்ஒன்றுபட்டுசமூக சீரழிவுகளைகளையவேண்டும் எனவும் வழியுறுத்தினார். பெண்களுக்கு நிறையவிழிப்புணர்வுபயிலரங்குகளைகல்வியாளர்கள் நடத்த முன் வரவேண்டும் என பேசினார்.

விழாவில்கல்லூரிசெயல் இயக்குனர் சாம்சன் ரவீந்திரன்கல்லூரிமுதல்வர்கள் மாதேஸ்வரன், தேவராஜன் கோபால், மோகன சுந்தரராஜ், ராஜவேல், மைதிலி, உமாமகேஸ்வரி, பேராசிரியர்கள்மற்றும்மாணவிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். விழாவில் கட்டுரை, பேச்சுதிறனாய்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளுடன்சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

தினமலர் சேலம், மார்ச் 9, 2014